# 'மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும்'

**பெங்களூரு,மே9:**மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜீனியஸ் குழுமத்தின் தலைவரும், மேலாண் இயக்குநருமான ஆர்.பி.யாதவ் கேட்டுக் கொண்டார்.

பெங்களூரில் வியாழக்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: இளைஞர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதில் எங்கள் நிறுவனம் முன்னுரிமை அளித்து வருகிறது. உடல் இயக்கத்தில் இயல்பானவர்களை விட மாற்றுத் திறனாளிகள் வேலை செய்வதில் 3 மடங்கு சிறந்து விளங்குவதும் ஆய்வில்



ஆர்.பி.யாதவ்.

தெரியவந்துள்ளது.

27.58 சதவீத பெரு நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதில் ஆர்வமாக உள்ளனர். என்றாலும் பல நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகள் பணி செய்வதற்கு தேவையான உள்கட்டமைப்பு இல்லாததால், அவர்களை பணிக்கு அமர்த்துவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளை சமமாக நடத்த தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தனியார் நிறுவனங்களை விட அரசு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவது குறைவாக உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். பேட்டியின் போது ஜீனியஸ் குழுமத்தின் துணைத் தலைவர் நீலப்பா ஹட்டரக்கி உடனிருந்தார்.